**தலைப்பு 239 – வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 239 - வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 ஆகஸ்ட் 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

## 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆரம்ப செலவின மதிப்பீடு மற்றும் திருத்தப்பட்ட செலவின மதிப்பீட்டை ஒப்பிடும் போது 06 செலவின விடயங்களுக் குரிய முரண்கள் 12 சதவீதம் குறைவடைந்தது முதல் 213 சதவீதம் அதிகரிப்பு வரையான வீச்சில் வேறுபாடு காணப்பட்டது. | செலவின விடயங்களின் ஆரம்ப செலவின மதிப்பீடைத் திருத்துவதற்காக கீழே காண்பிக்கப்பட்ட காரணங்கள் அடிப்படையாகக் கொள்ளப்பட்டது.<br>• கடமைகளை நிறைவேற்றும் அடிப்படையல் படிகள் கொடுப்பனவு, உபசரிப்பு கிரயம் உயர்ந்தமை, தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 02/2023 இன் பிரகாரம் மூலதனச் செலவினங்கள் வரையறுத்தல்.<br>• 2022 கட்டளையிடப்பட்ட இயந்திரங்களுக்குரியதாக 2023 ஆம் ஆண்டின் போது பட்டியல்கள் தீர்த்து வைத்தல்.<br>• நிதிக் குத்தகை வாகனங்களுக்காக தவணைப் பணம் செலுத்துவதற்கு மதிப்பீட்டு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு வரவு | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் வருடாந்த செலவின மதிப்பீடு சரியாகவும் தர்க்க ரீதியிலும் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செலவுத்திட்ட திணைக்களத்தின் மூலம் வரையறுத்தல்.<br><br>• டொலர் பெறுமதி வரையறையின்றி உயர்வடைந்து சென்றமை.<br><br>• 2022 ஆம் ஆண்டுக்குரிய கொடுப்பனவுகள் தொடர்பாக உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களை உள்ளடக்கிய செலவின அறிக்கை ஜப்பான் அரசாங்கத்தினால் சில தாமதங்களுடன் வழங்கப் பட்டிருந்ததுடன் அந்த செலவினங்களையும் உள்ளடக்கிய 2023ஆம் ஆண்டிற்காக தேவையான நிதி ஏற்பாட்டின் அளவை ஒதுக்க வேண்டி ஏற்பட்டிருந்தமை. | |
| (ஆ) | மூலதன செலவின விடயங்கள் இரண்டிற்காக ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடும் காலப் பகுதியில் செலவிடப் படாமல் முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | இதற்காக பின்வரும் விடயங்கள் காரணமாக இருந்தது.<br><br>• தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் செலவினங்கள் வரையறுத்தல்<br><br>• திணைக்களத்தின் சேவர் முறைமையில் சில பகுதிகள் அடுத்துவரும் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் ஆயுட்காலம் முடிவடைந்தமையால் அதனை தாய்க் கம்பனியால் அந்த பணிகள் நிராகரிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டமையினால் இந்த மேம்படுத்தல் மேற்கொள்ளப்படாமல் எதிர்வரும் ஆண்டிற்காகவும் சேவை உடன்படிக்கை மாத்திரம் மேற்கொள்ளப்பட்டமை.<br><br>• இலங்கை அரசாங்கத்தால் கடன் முகாமைத்துவ அலுவலகம் ஸ்தாபிப்பதற்கு இணங்கி இருந்ததுடன் அதன் பிரகாரம் புதிய கடன் முகாமைத்துவ மென்பொருள் முறைமையொன்று கொள்வனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. அதனால் CS-DRMS (Debt Recording and Management System) முறைமை மேம்படுத்தல் மேற்கொள்ளப்படாமை.<br><br>• TA System மென்பொருள் வடிவமைப்பதற்காக நிதி ஏற்பாடு கோரப்பட்டிருந்த போதிலும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் மூலம் அதற்கான நிதி மானியமொன்று பெற்றுக்கொள்வதற்கு | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| | | கலந்து ரையாடப்பட்டமையினால் இந்த நிதி ஏற்பாடு அதற்காக தேவைப்படவில்லை.<br><br>• சனாதிபதி அலுவலகத்தால் இலத்திரனியல் கையொப்பம் இடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக இலங்கை மத்திய வங்கியால் ஸ்தாபிக்கப்பட்ட Lankapay நிறுவனத்தாதல் முன்னுரிமை பதிவேடொன்றின் பிரகாரம் டிஜிட்டல் ஈடுபடுத்துதல் (Digital Signature Application) வழங்கப்பட்டமையால் அதற்காக வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு இதுவரை சந்தர்ப்பம் உரித்தற்றுக் காணப்பட்டமை. | |
| (இ) | மீண்டெழும் செலவின விடயங்கள் 10 மற்றும் மூலதன செலவின விடயங்கள் 04 இற்காக மிகை நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டதன் காரணமாக ஆண்டில் பயன்படுத்தப்பட்ட பின்னர் ரூபா 145,528,430 சேமிப்பு காணப்பட்டதுடன் அது தேறிய நிதி ஏற்பாட்டில் 10 சதவீதம் முதல் 99 சதவீதத்திற்கு இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது. | நிதி ஏற்பாடு சேமிப்பதற்கான காரணம் பின்வருமாறு.<br><br>• 13 உத்தியோகத்தர்கள் மாத்திரம் உள்நாட்டு வெளிநாட்டு விடுமுறைகள் பெற்றிருந்தமை.<br><br>• பாதீட்டு சுற்றறிக்கை 09/2022, 01/2023 மற்றும் 02/2023 இன் பிரகாரம் செலவின கட்டுப்பாட்டின் காரணமாகவும், எரிபொருள் நுகர்வு வரையறுத்தல், கட்டிட பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளாமை, தளபாடப் பொருகள், அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படாமை மற்றும் உள்நாட்டுப் பயிற்சிகள் வரையறுத்தல்.<br><br>• சனாதிபதி அலுவலகத்தால் விநியோகிக்கப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் வெளிநாட்டு பிரயாணச் செலவினங்களுக்காக செலுத்தப்படுகின்ற அமைய மற்றும் இணைந்த படிகள் குறைக்கப்பட்டமை.<br><br>• காகிதாதிகளின் விலைகள் கவனத்திற் கொள்ளக் கூடிய அளவில் வீழ்ச்சியடைந்தமை மற்றும் வாகன பராமரிப்புக்கள் அறிக்கையிடப்படாமை.<br><br>• ஆண்டின் இறுதி ஒன்பது மாதங்களுக்கான Video Conferencing (Zoom) அனுமதிப் பத்திரம், ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்பட்ட மானியத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டமை. | மேற்படி |

- 2022 ஆகஸ்ட் மாதம் முதல் அமைச்சின் இணையதள வசதிகள் கைவிடப்பட்டமை.

- இணையவழி ஊடாக உரிய கடிதங்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தமை.

- சில வெளிநாட்டு முகவர் நிறுவனங்களின் மூலம் அரசின் அங்கீகரிக்கப்பட்ட பங்களிப்புப் பணம் செலுத்துவதற்காக கோரிக்கையிடப்படாமை.

- ஆதனக் கடன் பெற்ற உத்தியோகத்தர்கள் இடமாற்றலாகிச் சென்றதன் அடிப்படையில் கடன் தவணைகளில் அரசாங்க பங்களிப்பிற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டமை.

- உரிய வெளிநாட்டு முகவர் மூலம் பட்டியல்களைத் தீர்த்துவைப்பதற்காக சமர்ப்பிக்கப்படாமை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டம் பெறப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் தற்போது பயன்படுத்தப்படுகின்ற CS-DRMS கடன் முகாமைத்துவ முறைமை, கடன் சேவையிடல் எதிர்வுகூறல்களை உள்ளடக்கிய பணிகளுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட முறைமை ஆகும். அதன் பிரகாரம் கடன் முகாமைத்துவ நடவடிக்கைகளுடன் காசுப்பாய்ச்சல் முகாமைத்துவம், கடன் கொடுக்கல் வாங்கல்கள் கணக்கீடு செய்யும் வசதிகளுடன் மற்றும் அல்லது CS-DRMS முறைமையில் ITMIS முறைமைக்கு தேவையான தரவுகளை மாற்றக்கூடிய வசதிகளுடன் கடன் முகாமைத்துவ முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு திணைக்களம் இதுவரை தவறியிருந்தது. | புதிய கடன் முகாமைத்துவத் தரவு முறைமையொன்றை கொள்வனவு செய்யும் பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | நாளது வரையாக்கப் பட்ட கணக்கீட்டு மற்றும் காசுப்பாய்ச்சல் வசதிகளுடன் முறைமையொன்றை பேணிச் செல்லல் வேண்டும். |

(ஆ) 2023 ஆண்டு செயலாற்றல் திட்டத்திற்கு இணங்க விநியோகித்தல் மதிப்பீடு மற்றும் உள்ளவாறான விநியோகித்தல் பெறுமதி பின்வருமாறு.

| அபிவிருத்தி தரப்பினர் | விநியோகித்தல் மதிப்பீட்டு மானியத்தை உள்ளடக்கி 2023(ஐ.அ.டொலர். மில்லியன்) | உள்ளபடியான விநியோகித்தல் பெறுமதி மானியத்தை உள்ளடக்கி 2023 (ஐ.அ.டொலர் மில்லியன்) | முரண்கள் (ஐ.அ.டொலர் மில்லியன்) | முரண்கள் விநியோகித்தல் மதிப்பீட்டின் சதவீதமாக (சதவீதம்) |
|---|---|---|---|---|
| ------------- | -------------- | -------------- | ------------- | -------------- |
| உலக வங்கி | 806 | 753.2 | (52.8) | (7) |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 1,011 | 856.9 | (154.1) | (15) |
| சீனா மற்றும் ஆசிய உட்கட்டமைப்பு வசதிகள் முதலீட்டு வங்கி (AIIB) | 21 | 24.2 | 3.2 | 15 |
| யப்பான் | 31 | 39.6 | 8.6 | 28 |
| கொரியா | 10 | 0 | (10) | (100) |
| மத்திய கிழக்கு ஆசிய நாடுகள் | 47 | 28.9 | (18.1) | (38) |
| தெற்கு ஆசிய நாடுகள் | 90 | 142.5 | 52.5 | 58 |
| ரஸ்யா, அவுஸ்திரேலியா மற்றும் மேற்கத்திய நாடுகள் | 30 | 32.2 | 2.2 | 7 |
| IFDA உள்ளடக்கி ஐக்கிய நாடுகள் முகவர் | 15 | 9.7 | (5.3) | (35) |

2022 ஏப்ரல் 12 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட வெளிநாட்டுக் கடன் சேவையிடல் கொடுப்பனவு தொடர்பாக இடைக்கால கொள்கை தொடர்பான அறிவித்தலுடன் அநேகமான கடன் வழங்கும் நாடுகள் மற்றும் நிறுவனங்களினால் தற்போது அமுல்படுத்தப்பட்டிருந்த செயற்திட்டங்களுக்கான நிதி விநியோகித்தல் கைவிடப்பட்டிருந்ததுடன் தற்போது சர்வதேச நிதியத்தில் இலங்கைக்கு முன்மொழியப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்களுக்கு இணங்கி கடன் மீள் கட்டமைப்பின் கலந்துரையாடல் அந்த கடன் வழங்குகின்ற நாடுகள் மற்றும் நிறுவனங்களுடன் நடாத்தப்படுகின்றது. அந்த கலந்துரையாடல்களின் செயல் முன்னேற்றத்தைக் கவனத்தில் கொண்டு 2023 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டின் சில ஏதாவது விநியோகித்தலின் அளவு மேற்கொள்ளப்படுகின்றதா என்ற எதிர்பார்ப்பில் 2023 ஆம் ஆண்டிற்காக கொரியா, ஜப்பான், சீனா இனை உள்ளடக்கிய இருதரப்பு கடன் வழங்குகின்ற நாடுகளுக்காக விநியோகித்தல் மதிப்பீ

டு செய்யப்பட்டிருந்தது. எனினும் அந்த கலந்துரையாடலில் எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் முடிவடையாமையின் காரணமாக மத்திய கிழக்கு மற்றும் கொரியா போன்ற நாடுகளில் மதிப்பீடு செய்யப்பட்ட விநியோகதித்தலை விட உள்ளபடியான விநியோகித்தல் குறைவடைந்திருந்தது.

ஜப்பானின் மூலம் நிதியீட்டம் செய்யப்படுகின்ற செயற்திட்டமும் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் கடன் மீள் கட்டமைப்பு கலந்துரையாடல்களில் இறுதி

முறையான பிரகாரம் திட்டங்களுடன் வெளிநாட்டு கடன் நிதியீட்டம் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| நிறுவனங்கள் | | | | |
| சர்வதேச நிதிசார் நிதியங்கள் | 682 | 681.5 | (0.5) | 0.07 |
| | --------- | ---------- | ---------- | |
| மொத்தம் | **2,743** | **2,568.7** | **(174.3)** | |
| | ===== | ====== | ====== | |

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) 2023 ஆண்டு எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீட்டின் மொத்த பெறுமதி ஐ.அ.டொலர் 2,743 மில்லியனான போதும், உள்ளபடியான எதிர்பார்க்கப்பட்ட பெறுமதி ஐ.அ.டொலர் 2,568.7 மில்லியன் ஆனமையின் காரணமாக உள்ளவாறான எதிர்பார்க்கப்பட்ட பெறுமதியை விட ஐ.அ.டொ. 174.3 மில்லியனால் அதாவது, 6 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ii) தெற்கு ஆசிய நாடுகள், யப்பான், சீனா மற்றும் ஆசிய உட்கட்டமைப்பு வசதிகள் முதலீட்டு வங்கி மற்றும் ரஸ்யா, அவுஸ்திரேலியா மற்றும் மேற்கத்திய நாடுகளில் இருந்து பெறப்பட்ட கடன்களின் உள்ளபடியான எதிர்பார்க்கப்பட்ட பெறுமதியை எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீட்டுடன் ஒப்பீடு செய்த போது முறையே 58, 28, 15 மற்றும் 07 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(iii) உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, மத்திய கிழக்கு ஆசிய நாடுகள் மற்றும் IFAD உள்ளடக்கி ஐக்கிய நாடுகள் முகவர் நிறுவனங்கள் என்பவற்றிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட கடன் முறையே 7, 15, 38 மற்றும் 35 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(iv) மீளாய்வாண்டின் போது கொரியாவிலிருந்து கடன் பெற்றுக்கொள்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்ட போதும் ஆண்டின் இறுதி வரையிலும் கடன் பெறப்பட்டிருக்கவில்லை.

இணக்கப்பாட்டிற்கு வர முடியாமல் இருந்தமையால் கடன் விநியோகித்தல் மேற்கொள்ளப்படவில்லை. எனினும் ஜப்பானால் இலங்கைக்கு மானியப் பணம் எதிர்பார்க்கப்பட்ட அளவினை விட அதிக அளவில் வழங்கப்பட்டமையால் அதன் உள்ளபடியான விநியோகித்தலில் அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது.

நாட்டில் காணப்பட்ட பொருளாதார நெருக்கடி நிலைமையுடன் செயற்திட்டத்தை அமுல்படுத்தும் போது ஏற்பட்ட தாமதத்தின் காரணமாக உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கியின் மூலம் மேற்கொள்ளப்பட்ட விநியோகித்தல் மதிப்பீட்டுப் பெறுமதியின் உள்ளபடியான விநியோகித்தல் சிறு அளவில் மாற்றமடைவதற்குக் காரணமாக இருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (இ) | வெளிநாட்டு அரச கடன் அறிக்கையில் பயன்படுத்துகின்ற CS-DRMS கடன் முகாமைத்துவ கணனி முறைமையில் உள்ளடக்கப்பட்ட தரவுகள் இணங்காமை | இந்தக் கடன் இலக்கங்களுக்குரிய CS-DRMS 854-1 அறிக்கையில் 2023.12.31 இல் உள்ளவாறு இறுதி மீதி கடன்கொடுத்தோரின் அறிக்கையுடன் ஒப்பிடப்படுகின்றது. | அரசாங்கக் கடன் பெறுவனவு மற்றும் கடன் சேவைகள் கணக்கீடு செய்தலை முறையாக மேற்கொள்ளல் வேண்டும். |
| (i) | CSDRMS 854-1 அறிக்கை மற்றும் அரசாங்கத்தின் நிதி கூற்றுக்களை ஒப்பீடு செய்யும் போது இவ்வாறு கணக்கீடு செய்யப்படாத வெளிநாட்டுக் கடன்களில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்தப் பெறுமதி ரூபா 15,823 மில்லியன் ஆகும். மேலும் அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் விளக்கமளித்தல் குறிப்பின் கீழ் (Explanatory Notes) குறிப்பு இலக்கம் 24(II) இன் மூலம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்கீடு செய்யப்படாத வெளிநாட்டு கடன்களின் மொத்தப் பெறுமதி ரூபா 17,103.2 மில்லியன் ஆக காண்பிக்கப்படடிருந்தது. இவ்வாறே மீளாய்வாண்டிலும் அதற்கு முன்னைய ஆண்டுகளிலும் தேறாதிருந்த போதும் கணக்கீடு செய்யப்படாத கடன் பெறுமதி காணப்பட்டதன் காரணமாக 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் வெளிநாட்டு கடன் பெறுமதி ரூபா 15,823 மில்லியன் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ii) | கடன் இலக்கம் 2018003 இற்குரிய CSDRMS 854-1 அறிக்கையில் 2023 ஆம் ஆண்டிற்குரிய எந்தவொரு மாற்றப்படாதவைகள் காணப்படாத போதிலும் அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 24(II) மற்றும் பாதீட்டு செயற்படு நிலைமை மற்றும் நிலுவை நிதியீட்டத்தின் கீழ் குறிப்பு இலக்கம் 11 இன் பிரகாரம் EUR 727,053 தேறியிருந்த தாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் சமர்ப்பித்த தகவல்களின் படி இந்த கடன் தொகைக்குரிய 2022 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு முன்னைய ஆண்டுகளில் தேறாதிருந்த 2023 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்யப்பட்ட கடன் பெறுமதி EUR 335,930 மாத்திரமாகும். அதன் பிரகாரம் இந்த | கடன் உரிமையாளருடன் மீதியை இணக்கம் செய்யும் போது வெளிப்படுத்தப்பட்டிருந்த பிரகாரம் தாமதமாகி 2023.07.18 ஆந் திகதி கிடைத்த 2021 ஆம் ஆண்டிற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட யூரோ 391,122.75 விநியோகித்தல்கள் 2023 ஆம் ஆண்டின் போது குறிப்பிடப்பட்டுள்ளது. 2023.12.31 இல் உள்ளவாறு இறுதி மீதிப் பெறுமதி உரிய கடன் உடரிமையாளரின் அறிக்கையுடன் இணக்கம் செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 854-1 இல் குறிப்பிடப்பட்டவை | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| | கடன் தொகைக்குரிய 2023 ஆம் ஆண்டில் தேறியிருந்ததுடன் EUR 391,123 வேறுபாடு காணப்பட்டது. | சரியானதாகும். | |
| (iii) | 23 கடன் உடன்படிக்கைகளுக்குரிய CSDRMS 854-1 அறிக்கையில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, 2023 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு உரிய மீதிகளுக்கிடையே கூட்டு மொத்தமாக ரூபா 30,401 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டில் அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 24(11) பாதீட்டு செயற்படு நிலை மற்றும் பற்றாக்குறை நிதியீட்டத்தின் கீழ் குறிப்பு இலக்கம் 11 இல் மீளாய்வாண்டின் போது உள்ளபடியாக கடன் தேறல்களில் சரியான பெறுமதி வெளிப்படுத்தப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் காரணமாக இருந்தது.<br>• வெளிநாட்டு வளங்கல் திணைக்களத்திற்குரிய கடன் கொடுத்தோரிடம் இருந்து தாமதமாகிக் கிடைத்த தேறிய பெறுமதி மற்றும் மாற்றப்பட்ட தேறிய பெறுமதிகளுக்கு இடையே தேறிய பெறுமதிகளின் பிரகாரம் CS-DRMS தரவு முறைமை சரியாக நாளது வரையாக்கப்பட்டுள்ளது.<br>• 2010117, 2010121- ஐ.அ.டொலர் (USD) அந்நிய செலாவணியில் பெறப்பட்ட இந்த கடன் 2010 ஆம் ஆண்டின் போது ஐ.அ. டொலர் அந்நிய செலாவணி விசேட உரித்து (SDR) அந்நிய செலாவணியில் மாற்றப்பட்டுள்ளது. 2010 இல் மாற்றங்கள் மேற்கொள்ளப்படும் போது விசேட பெறுவனவு உரித்து (SDR) அந்நிய செலாவணியில் காணப்பட்ட மீதி ஐ.அ. டொலர் (USD) நாணய மாற்று மூலம் 2022 ஆம் ஆண்டின் போது செலுத்தி பூர்த்தி செய்ய முடிவுறுத்தப்பட்ட போதிலும் நாணய மாற்று வேறுபாடுகளின் காரணமாக இந்தக் கடனில் செலுத்தப்படாத மீதியொன்று காண்பிக்கப்படுகின்றது.<br>இந்த தொழில் நுட்ப ரீதியான வழுக்களள் CS-DRMS தரவு முறைமையில் சரி செய்யப்பட்டதன் காரணமாக கணக்காய்வில் | அரசாங்க கடன் பெறுவனவு, கடன் சேவைகள் கணக்கீடு செய்தல் முறையான பிரகாரம் மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன் விநியோகித்தல் தாமதம் அடைவதை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

சுட்டிக்காட்டப்பட்ட வேறுபாடுகள் ஏற்பட்டிருந்தது.

- பிரான்ஸ் பிராங் நாணய மாற்றல் செலாவணியில் பெறப்பட்ட கடன், 2002 ஆம் ஆண்டின் போது அந்த கடன் பிரான்ஸ் பிராங் நாணய மாற்றில் யூரோ நாணய மாற்றுலுக்கு மாற்றப்படும் போது காணப்பட்ட மீதி யூரோவின் மூலம் 2019 ஆம் ஆண்டின் போது செலுத்தி பூர்த்தி செய்யும் போது ஏற்பட்ட நாணய மாற்று வேறுபாடு சரி செய்தல்.
- உரிய கடன் கொடுத்தோர் ஆன ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பீட்டு ஆய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட பிரகாரம் கடன் பெறப்பட்டு கடன் மீள கையளித்தல் பெறுமதி தரவு முறைமையில் அகற்றி கடன் கொடுத்தோரில் பெறுவனவுகள் குறிப்புக்கள் மற்றும் சீராக்கங்கள் 2023.05.09 ஆந் திகதி சரிசெய்தல்.

- உரிய கடன் கொடுத்தோருடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பீட்டின் போது வெளிப்படுத்தப்பட்ட பிரகாரம் இந்த கடன் இலக்கங்களுக்கு உரியதாக மேற்கொள்ளப்பட்ட தேறிய பெறுமதியின் பிரகாரம் CS-DRMS தரவு முறை சரியாக நாளது வரையாக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| | | • இந்தக் கடன் Science Technology Human Resource Development செயற்திட்டத்திறகாக ஆசிய அபிவிருத்தி வங்கியில் இருந்து கிடைத்த 2019.01.17 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்ட இரண்டு கடன் தொகைகள் ஆகும். இந்த கடன் தொகை இரண்டினதும் கொடுக்கல் வாங்கல்களை குறிப்பிடும் போது உரிய ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்பட்டுள்ள இலக்கம் SRI 3699, SRI 3698 இற்குரிய குறிப்புக்கள் தவறுதலாக மாறி தரவு முறைமையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக கடன் உரிமையாளருடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பீட்டு செய்த போது (Reconcile) அவதானிக்கப்பட்டது. இதனை சரி செய்தல் காரணமாக இந்தக் கடன் மீதி மாற்றமடைந்திருந்தது.<br><br>மேற்கூறப்பட்ட கடன் இலக்கங்களுக்கு உரிய நாளது வரையாக்கல் தொடர்பாக 2023 ஆம் ஆண்டின் போது தேவையான நடவடிக்கைகளுக்காக திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் விநியோகித்தல் தாமதமாகக் கிடைக்கின்றமையை குறைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் கணக்காய்விற்கு அனுப்பப்பட்டுள்ளது. | |
| (iv) | 04 கடன் உடன்படிக்கைகள் தொடர்பாக கூட்டுமொத்தமாக ரூபா 821,115,454 மறைக்கடன் விநியோகித்தல் மீளாய்வாண்டில் அரசின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் CS-DRMS 854-1 அறிக்கையில் அவதானிக்கப்பட்டது. | உரிய கடன் உரிமையாளரினால் பேணிச் செல்லப்படுகின்ற இணையவழி முறைமையில் விநியோகித்தல் மீளக் கையேற்றல் (Refund) குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அதன் மறைப் பெறுமதியாக CS-DRMS | அரச கடன் பெறுவனவு, கடன் சேவையிடல் கணக்கீடு செய்தல் முறையான பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | | தரவு முறைமையில் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளது. | மேற்கொள்ளப் படல் வேண்டும். |
| (v) | அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 24(I) சமரிப்பற்றுள்ள அந்நிய செலவாணி பணம் வங்கி அலகு செயற்திட்ட கடன் மீதிகளுக்கு (Foreign Currency Banking Unit Loan (Project) Balances) உரிய CS-DRMS 854-1 அறிக்கையுடன் பரீட்சித்த போது 2017045 கடன் உடன்படிக்கைக்குரிய 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு CS-DRMS 854-1 அறிக்கையில், 2023 சனவரி 01 இல் உள்ளவாறு அந்த அறிக்கையில் USD 227,823 தொகை அதாவது ரூபா 82,724,927 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. மேலும் கடன் மீள செலுத்தப்பட்டிருந்த போதும் USD 227,823 வேறுபாடு அவதானிக்கப்பட்ட போதிலும் அந்த உள்நாட்டு பண பெறுமதியில் வேறு எந்த வேறுபாடும் அவதானிக்கப்படவில்லை. மேலும் அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களின் படி மீள செலுத்தப்பட்ட USD 332,704 பெறுமதியான தொகையை உள்நாட்டு பணமாக மாற்றும் போது USD 1 ரூபா 524.6050 ஆக அசாதாரண அந்நிய செலவாணி விகிதம் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பல்வேறு நாணயச் சேவைகளில் (Multicurrency) ஆன இந்தக் 2017045 கடன் இலக்கத்திற்குரிய 2022.12.30 இல் உள்ளவாறு கடன் மீள செலுத்தல் தவறு ஒன்றினால் இலங்கை ரூபா நாணயத்தின் பிரகாரம் கடன் பெறப்பட்ட ஐ.அ.டொலர் செலாவணியின் செல்லுபடியான முறைமை திட்டத்தில் மேற்கொள்ளப்படவில்லை. அதனை சரி செய்ததன் காரணமாக இந்த வேறுபாடு ஏற்பட்டிருந்தது. உரிய நாணய மாற்று விகிதம் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளது. | மேற்படி |
| (vi) | பங்களிப்பாளர்களினால் அனுப்பப்பட்ட கடன் மீதியை உறுதிப்படுத்துதல், அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களுடன் கணனி கடன் முகாமைத்துவ முறைமையில் 854-1 அறிக்கையுடன் ஒப்பீடு செய்யும் போது 13 கடன் வகைகளுக்கு உரிய மீதி ரூபா 4,775 மில்லியன் அதிகரித்தும், 14 கடன் வகைகளுக்குரிய ரூபா 5,126 மில்லியன் குறைத்தும் அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கடன் மீதி மேலதிகமாக குறிப்பிடுவதற்கான காரணம் பின்வருமாறு<br>• 1990009 - உரிய ஒவ்வொரு நாணய மாற்றில் இருந்தும் கிடைத்த எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டு பெறுவனவுகளின் உரித்து அந்நிய செலாவனி மாற்றத்தின் போது முறைமையில் ஏற்பட்ட நாணய மாற்று வேறுபாடு ஆகும். | மேற்படி |

- 1998037 - Study and Expert Fund II செயற்திட்ட கடன் தொகையில் எஞ்சிய கடன் தொகையான Euro 22,583.76 இந்த கடன் தொகைக்குரிய 2020.12.30 ஆம் திகதி கடன் மீள செலுத்துதலை ஈடுசெய்தல்.

- ஏனைய கடன் இலக்கம் 11 இற்குரிய 2023.12.31 இல் உள்ளவாறு செலுத்தப்பட்டிருந்த மீதியாக 2022 ஏப்ரல் 13 முதல் செலுத்தப்படாத தவணை (Principal Arrears) கடன் உரிமையாளரால் குறைக்கப்பட்டுள்ளது. 854-1 அறிக்கையின் மீதியிலும் செலுத்தப்படாத தவணைகளில் உள்ளடக்கப்பட்ட மீதியைக் காண்பிக்கப்படுகின்றது. அதன் பிரகாரம் 854-1 அறிக்கையின் பெறுமதி சரியானதாகும்.

கடன் மீதியைக் குறைத்து பதியப்பட்டமைக்கான காரணம்

- கடன் இலக்கம் 9 இற்குரிய கடன் கொடுத்தோர் நிறுவனமான ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்படுகின்ற கடன் மீள செலுத்தும் அறிவித்தல் விநியோகித்த திகதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் மற்றும் விசேட பெறுவனவு உரித்துக்கள் அந்நிய செலாவனி மாற்றல் விகிதம் மற்றும் மீள

செலுத்துதல் கடன் உரிமையாளர்களுக்கு உள்ளபடியான திகதியில் காணப்பட்ட உரிய அந்நிய செலாவணி மாற்றல் விகிகதத்ததை சமமப்படுத்துதல்.

- பல்வேறு நாணயச் சேவைகளில் (Multicurrency) ஆன 1990003 கடன் இலக்கத்தின் 2023.12.01 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட கடன் மீள செலுத்துவதற்கு ஐ.அ.டொலர் 1,012,534.60 தொகைக்குரிய கடன் உரிமையாளரால் அனுப்பப்பட்ட நேரொத்த விசேட பெறுவனவு உரித்து செலாவணி அளவு (SDR equivalent) SDR 770,000 அளவு SDR 7,700,000 ஆக தவறுதலாக தரவு முறைமையில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் 2024.05.22 ஆந் திகதி இது சரி செய்யப்பட்டுள்ளது.

- 2012022, 2018047 - இது தொடர்பாக உரிய கடன் கொடுத்தோரிடம் விசாரணை செய்யப்பட்டுள்ளது. எனினும் இது வரையில் எதிர்பார்க்கப்பட்ட பெறுவனவுகள் தொடர்பாக உரிய கடன் உரிமையாளரால் எங்களுக்கு உறுதிப்படுத்தப்படவில்லை. உரிய கடன் உரிமையாளரிடம் இருந்து இது எதிர்பார்க்கப்பட்டமை தொடர்பாக எதிர்பார்ப்பக்கள் கிடைத்த பின் உடனடியாக

| | | | |
|---|---|---|---|
| | | முறைமை சரி செய்யப்படும்.<br><br>• 2012024, 2019019 – உரிய கடன் உரிமையாளரிடம் இருந்து தாமதமாகக் கிடைத்த எதிர்பார்க்கப்பட்ட பெறுமதியைக் குறிப்பிடுதல் தரவு முறைமையில் சரியாக நாளது வரையாக்கப்பட்டுள்ளது. | |
| (vii) | விநியோகித்தல் பிற்போடப்பட்ட காலப்பகுதியை கருத்திற்கொள்ளும் போது 2023 ஆம் ஆண்டுக்கு உரியதாக பிற்போடப்பட்ட வெளிநாட்டுக் கடன் 2023 மே 07 ஆந் திகதி அச்சிடப்பட்ட கணனி மயப்படுத்தப்பட்ட கடன் முகாமைத்துவ முறைமையில் 814-1 அறிக்கையில் அந்த தீர்வையாதல் உள்ளடக்கப்பட்ட போதிலும், 2024 பெப்ரவரி 17 ஆந் திகதி அச்சிடப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் அதன் பிரகாரம் ரூபா 1,290 மில்லியனான வெளிநாட்டுக் கடன் நிலுவை அரசின் நிதிக்கூற்றுக்களிலும் விநியோகிக்கப்பட்ட கடனாக கணக்கீடு செய்தல் கைவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | • இலக்கம் 2019019 மற்றும் 2012024 – கடன் உரிமையாளரான ஆசிய உட்கட்டமைப்பு வசதிகள் முதலீட்டு வங்கி மற்றும் ஒபேக் நிதியத்தால் தாமதமடைந்து அனுப்பப்பட்ட விநியோகித்தல்களின் பெறுமதி குறிப்பிடப்பட்டமையால் CS-DRMS தரவு முறைமை 2024 ஆம் ஆண்டின் போது சரியாக நாளதுவரையாக்கப்பட்டுள்ளது. | மேற்படி |
| (ஈ) | 1994 ஏப்ரல் 20 திகதிய இலக்கம் 30/94 கொண்ட அரச கணக்குகள் சுற்றறிக்கை பிரகாரம், வெளிநாட்டு மானியம் தொடர்பான அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் பொது திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் மேற்கொள்ள வேண்டுமென குறிப்பிடப்பட்ட போதும், மாதிரி பரிசோதணையின் மீது பெற்றுக் கொண்ட தகவல்களின் பிரகாரம், 2023 ஆண்டினுள் அவ்வாறு பொது திறைசேரியை அறிவூட்டாது 11 நிறுவனங்களுக்காக கூட்டுத் தொகை ரூபா 22,210 மில்லியன் ஆன வெளிநாட்டு மானியங்கள் நேரடியாக கிடைத்திருந்ததுடன் அப் பெறுமதிக்கு ஏற்பாடு பெற்றுக் கொண்டு நிதிக்கூற்றுக்களிற்கு உட்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு அறிவித்து பெறப்பட்ட மானியம் தொடர்பாக உரிய பிரகாரம் பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றது. ஏனைய நிறுவனங்களுக்கு மாத்திரம் அறிக்கையிடப்பட்ட மாணியங்கள் தொடர்பாக அந்த சுற்றறிக்கை, ஆலோசனைக் கோவை, நிதிப்பிரமானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் சகல அமைச்சின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், நியதிச் சட்ட நிறுவனங்களின் தலைவர்களின் பொறுப்பாகும்.<br><br>இது தொடர்பாக வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தால் மானியங்களுக்கான நிதியேற்பாடு ஒதுக்குவதற்கு மற்றும் / அல்லது | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தால் உரிய பிரகாரம் கட்டுநிதி விடுவிப்பதற்கு முன் உரிய மாணியங்களுக்காக இந்த திணைக்களத்தின் பரிந்துரை பெறப்பட்டிருந்ததா என பரீட்சித்து அவ்வாறான பரிந்துரையுடன் உள்ள மாணியங்களுக்காக மாத்திரம் நிதியேற்பாடு வழங்குதல் அல்லது கட்டுநிதியை விடுவித்தல் பொருத்தமானதாக இருந்நது அவதானிக்கப்பட்டது. மேலும் மாணியங்கள் தொடர்பாக தற்போது வரைவு செய்யப்படுகின்ற அரச நிதி முகாமைத்துவ சட்டத்தின் சட்ட ரீதியான ஏற்பாடுகளை வழங்குதல் பொருத்தமானது என முன்மொழியப்பட்டுள்ளது. | |
| (உ) | 2019 சனவரி 01 ஆம் திகதி முதல் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரை வெளிநாட்டு மானியங்களை பெற்றுக் கொள்வதற்காக திறைசேரியினால் ஒவ்வொரு வெளிநாட்டு மானிய நிறுவனங்கள் 13 நிறுவனங்களுடன் கூட்டுப் பெறுமதி ஜப்பான் யென் 984,000, யூரோ 134,810,000, அ.டொலர் 58,417,841, கொரியன் வொன் 400,000, சீன யுவான் 2,000,000,000 மற்றும் ரூபா 4,545,750 ஆக பல்வேறு நாணயங்களில் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அந்த வெளிநாட்டு மானியங்கள் கிடைத்திருந்தமைக்குரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்பட்ட போதும் வெளிநாட்டு மானியம் கிடைக்கப் பெறாத உடன்படிக்கையின் மூலம் தற்போது பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் அவற்றை அறிக்கையிடுவதற்காக மானியம் வழங்கிய நாடு / நிறுவனத்தால் புதிய தகவல்கள் இந்த திணைக்களத்திற்கு வழங்கப்படாதிருந்த மானியங்கள் ஆகும். மேலும்<br><br>• 2022209 மற்றும் 2023209 – ஜப்பான் , ஜப்பான் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இந்த உதவி மானியம் இரண்டையும் பெற்றுக் கொள்வதற்காக ஜப்பான் அரசுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. இந்த உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக | இலங்கை அரசாங்கத்தினால் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்படுகின்ற வெளிநாட்டு மானியங்களை முழுமையாக பெற்று உச்ச அளவில் நோக்கங்களுக்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

தேவையான நடவடிக்கைகள் பெறுகை முகவரினால் மேற்கொள்ளப்பட்டதுடன் (1) செயற்திட்டத்தின் உபகரணப் பகுதி இந்த ஆண்டிலும் மிகுதியை வருகின்ற ஆண்டிலும் பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (3) செயற்திட்டத்தின் கீழ் ஆன உபகரணங்கள் எதிர்வரும் இரண்டு வருடங்களில் பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

- 2023207 – ஜப்பான், இது ஜப்பான் அரசினால் மனித அபிவிருத்தி புலமை பரிசில் (JDS) ஜப்பான் உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இலற்கைக்கான நீண்ட கால புலமை பரிசில் வழங்குதலாகும். அதன் முதல் கட்டம் இந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன் தற்போது புலமை பரிசிலுக்காக உத்தியோகத்தர்கள் தெரிவு செய்து பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் அவர்கள் 2024 ஆகஸ்ட் மாதத்தில் ஜப்பானின் பல்கலைக்கழகத்தில் கல்விக்காக அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

- 2019241 – நெதர்லாந்து, இந்த செயற்திட்டத்திற்காக உடன்படிக்கை கைச்சாத்திடல் 2019 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட போதிலும் அதன் பின்னர் எழுந்திருந்த நிலைமையின் காரணமாக

2021 ஆம் ஆண்டின் யூலை மாதம் வரை செயல்திட்டத்தை அமுல்படுத்தல் தாமதம் அடைந்திருந்தது. அது 2025 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

- 20190211 – ஜேர்மன், இது மகமோதர தாய் சேய் வைத்தியசாலை நிர்மானிக்கும் செயற்திட்டத்திற்காக ஜேர்மன் அரசு வழங்கிய நிதி உதவி ஆகும். இந்த செயற்திட்டம் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் நிர்மாண காலத்தை நீடிக்க வேண்டி ஏற்பட்ட செயற்திட்டம் ஒன்றாகும்.
- ஜேர்மன், ஐரோப்பா சங்கம், ஐரோப்பிய சமூகம், அமெரிக்க ஐக்கிய குடியரசின் கீழ் வழங்கப்படுகின்ற மானியங்களுக்காக நிதி அமைச்சின் ERD/AE/GEN/16 மற்றும் 2020.10.02 ஆம் திகதிய “Streamlining the Fund Channeling Mechanism and Implementation Modalities of Grant Funded Projects” சுற்றறிக்கையின் கீழ் விநியோகிக்கப்படுகின்ற ஆலோசனைக் கோவையின் பிரகாரம் மேற்பார்வை மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்வதற்காக தேவையான தகவல்களை வழங்குதல் உரிய செயற்திட்டத்தை அமுல்படுத்துகின்ற அமைச்சு அல்லது நிறுவனங்களால்

நிறைவேற்ற வேண்டிய பணி ஆகும். இந்த செயற்திட்டங்களை அமுல்படுத்தும் போது செலவின அறிக்கை கிடைக்காமையின் அடிப்படையில் வெளிநாட்டு வழங்கல் திணைக்களத்தின் தரவு முறைமையில் பயன்படுத்தப்பட்ட அளவு உள்ளடக்கப்படவில்லை.

- 2021212 – ஆசிய அபிவிருத்தி வங்கி செயற்திட்டத்தை அமுல்படுத்தும் போது ஏற்பட்ட தாமதத்தால் அமுல்படுத்தப்படவில்லை.

- 2021211 – IFAD, இந்த மானியம் தொகையில் மேற்கொள்ளப்பட்டிருந்த பணிகள் தொழில் நுட்ப கற்கை செயற்திட்ட முகாமைத்துவ அலகின் மூலம் மேற்கொள்ளப்பட்டமையால் இந்தத் தொகை செலவினத்தின் செலவிடுவதற்கான தேவை ஒன்று காணப்படவில்லை.

- 20190206 – யுனெஸ்கோ, இதன் தகவல் இந்தத் திணைக்களத்தில் அறிக்கையிடப்பட வில்லை.

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2017 யூன் 28 ஆந் திகதிய சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 01/2017 இன் பிரகாரம் கொம்ட்ரோலர் ஜனரால் இற்கு சமர்ப்பிக்கப்பட்ட சொத்துக்கள் அறிக்கையில் 2023 | 2023.12.31 இல் உள்ளவாறு கொம்ட்ரோலர் ஜனரால் இற்கு அனுப்பப்பட்ட சொத்துக்கள் அறிக்கை உரிய கணனி மென்பொருள் நிகழ்ச்சித் திட்டம் ஊடாக | திணைக்களத்திற்குச் சொந்தமான சொத்துக்களை இனங்காண்பதற்கும் பதிவேடுகளுக்கு கொண்டு |

| | | |
|---|---|---|
| திசம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் நிலையான சொத்துப் பதிவேட்டின் பிரகாரம் கூட்டுமொத்தமாக ரூபா 18,800,000 ஆன மூன்று வாகனங்களின் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | சமர்ப்பிக்கப்பட்டதுடன் அதில் வாகனங்கள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கும் போது உரிய வாகனங்களைப் பயன்படுத்துகின்ற நிறுவனங்களினால் உரிய தகவல்கள் உள்ளடக்க வேண்டியிருந்தமையால் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் விஷேட கடமைகளுக்காக அதனை பயன்படுத்துவதற்கு தற்காலிகமாக வழங்கப்பட்டுள்ள இந்த வாகனங்கள் தொடர்பாக 2023.12.31 இல் உள்ளவாறு உரிய தகவல்கள் இந்த திணைக்களத்தின் மூலம் உள்ளடக்கப்படவில்லை. | வருவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. மனித வள முகாமைத்துவம்**

**4.1 நியமிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர்.**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தில் காணப்பட்ட 18 வெற்றிடங்களில் சிரேஷ்ட நிலையில் 06 வெற்றிடங்களும், இரண்டாம் நிலையில் 06 வெற்றிடங்களும் மற்றும் ஆரம்ப நிலையில் 06 வெற்றிடங்களும் காணப்பட்டது. | சிரேஷ்ட நிலையில் வெற்றிடங்களை நிரப்புவதற்காக அரச நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு அறிவிக்கப் பட்டுள்ளதுடன் பொருத்தமான உத்தியோகத்தர்கள் இதுவரை நியமிக்கப்படவில்லை. இரண்டாம் நிலையில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களில் 06 வெற்றிடங்கள், ஆரம்ப நிலையில் வெற்றிடங்களுக்கிடையே இணைந்த சேவையின் சாரதி வெற்றிடங்கள் 04 மற்றும் அலுவலக ஊழியர் சேவை வெற்றிடம் 01 என்பவற்றை | தேவையான பதவி யணியினரை சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அத்தியவசியமற்ற பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் காணப்படுமாயின் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையைத் திருத்துதல் வேண்டும். |

நிரப்புவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சிற்கு கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆரம்ப நிலையில் திணைக்களமயப்படுத்தப்பட்ட 01 சாரதி பதவியினை நீக்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட கோரிக்கை வரிசை அமைச்சின் மூலம் பரிந்துரை செய்யப்படவில்லை.